DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.281/2023**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | தனுஷ்கோடி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சுப்பையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 16.06.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது K.சிறுவனூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 2020 ம் வருடம் ஒரு நாள் காலை 11 மணிக்கு புகார்தாரர் அமுதா டிராக்டரை கொண்டு உழுவதற்காக அவர் வயலில் நிறுத்தினார். அப்போது எதிரிகள் அனைவரும் டிராக்டரை மறித்து புகார்தாரர் அமுதாவை தள்ளி விட்டார்கள். நாங்கள் அமுதாவை தூக்கிவிட்டு அதை மறித்து தடுத்து விலக்கிவிட்டோம். பின்பு புகார்தாரரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் கூறினேன். வயல் பிரச்சனை சம்பந்தமாக புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருக்கிறது என்றால் இல்லை, தற்போதுதான் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. புகார்தாரரர் மற்றும் எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். நான் பிரச்சனையை தடுத்து அனுப்பிவைத்தேன் என்றும் வேறு எதுவும் தெரியாது என்றால் ஆமாம்.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.281/2023**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகவேல் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | காளிமுத்து |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 16.06.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது K.சிறுவனுரில் வசித்து வருகிறேன். புகார்தாரர் அமுதா என் பாட்டி. அ.சா.1 என் அம்மா. கடந்த 01.08.2020 ம் தேதி காலை 11.00-12.00 மணியளவில் நான், அ.சா.1, புகார்தாரர் ஆகியோர்கள் இடத்தை உழுவதற்கு சென்றபோது கணபதி, செல்லம், காளியம்மாள், கணபதி மகன்கள் இருவர் ஆகியோர்கள் வந்து அசிங்கமாக பேசி அடிக்க வந்தார்கள். அங்கிருந்தவர்கள் தடுத்துவிட்டார்கள். அதன்பிறகு மீண்டும் இந்த இடத்திற்கு வந்தால் கொலை செய்வதாக என் பாட்டியை மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.